**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**OS.No.41/2010**

**வழக்கு சாட்சி DW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பாலசுப்பிரமணி** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கருப்பச்சாமி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : வடகவுஞ்சி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 75/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 02.07.2026 |

**முதல் விசாரணை :**

நான் வடகவுஞ்சியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வாதி இலட்சுமி மற்றும் பிரதிவாதிகள் ராஜாமணியம்மாள், தேசகநாதன் ஆகியோர்களை எனக்குத் தெரியும். மேற்சொன்ன நபர்கள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். இலட்சுமி எனது அப்பாவுடன் பிறந்த தம்பி மகள் ஆவார். இலட்சுமியின் தந்தை பெயர் கருப்பணன் @ சின்னத்தம்பி ஆகும் . கருப்பணன் @ சின்னத்தம்பியுடன் உடன்பிறந்தவர்கள் அவரைச் சேர்த்து 3 நபர்கள். 1வது சகோதரரின் பெயர் கருப்பச்சாமி , 2வது சகோதரரின் பெயர் கருப்பணன், 3வது சகோதரரின் பெயர் கருப்பணன் @ சின்னத்தம்பி . மேற்சொன்ன 3 நபர்களின் தந்தை பெயர் குப்புச்சாமி ஆகும். குப்புச்சாமிக்கு அசையா சொத்துகள் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது . குப்புச்சாமியின் சொத்துகளை அவரது வாரிசுகள் பிரித்துக்கொண்டார்கள் . கருப்பணன் @ சின்னத்தம்பி இறந்து தோராயமாக சுமார் 30 வருடங்கள் இருக்கும், இறந்த தேதி குறிப்பிட்டு தெரியாது . கருப்பணன் @ சின்னத்தம்பி இறந்த பிறகு அவரது சொத்துகளை இலட்சுமி,

தேசகநாதன், ராஜாமணியம்மாள் ஆகியோர்கள் பிரித்துக்கொண்டார்கள். 1990 ல் கருப்பணன் @ சின்னத்தம்பியின் சொத்துகளை மேற்சொன்ன இலட்சுமி , தேசகநாதன், ராஜாமணியம்மாள் பிரித்துக்கொண்டார்கள். பிரித்தச் சொத்துகளை அவரவர் பாகமாக அனுபவித்து வருகிறார்கள் . கருப்பணன் @ சின்னத்தம்பியின் சொத்துகளை பிரிக்கும்போது நான் இருந்தேன், ஆனால் என் அப்பா இருக்கும்போது தான் பாகப்பிரிவினை செய்தார்கள்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இலட்சுமி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்து ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரிந்த பிறகுதான் நான் வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான் . நான் இந்த வழக்கில் எனது சாட்சியத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை சொத்துகள் மீது இலட்சுமி வழக்கு தொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்குத் தெரியாது . எந்த எந்த சொத்துகள் இலட்சுமி வழக்கு தொடுத்துள்ளார் என்ற விபரமும் எனக்குத் தெரியாது . எந்த எந்த சொத்துகளை பிரித்துக்கொண்டார் என்ற விபரம் எனக்குத் தெரியாது , ஆனால் எந்த எந்த இடம் என்று எனக்குத் தெரியும் . இந்த வழக்கில் என்னை எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளார்கள் , என்னைச் சொல்லி வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது. எதற்காக என் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாத நிலையில் நான் ஏன் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் என் அப்பா சொத்து என்பதால் நான் எதிர்வாதம் செய்து வருகிறேன்.

நான் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் நானாக முன்வந்து சாட்சியம் அளிக்க வரவில்லை

என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த பிராதில் 7 வது பத்தியில் நான் இதர பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யான சங்கதிகளைக் கூறி செயல்படுகிறேன் என குறிப்பிட்டுள்ள நிலையில் அதனடிப்படையிலேயே நான் தற்போது நீதிமன்றத்தில் பொய்யான சங்கதிகளைக் கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். அந்த அழைப்பாணை **வா.சா.ஆ. 8** ஆகும். 1 மற்றும் 2 பிரதிவாதிகள், நானும் ஒன்று சேர்ந்துக்கொண்டு சட்டத்திற்கு விரோதமாக வாதிக்கு எதிராக செயல்படுகிறோம் என்றால் சரியல்ல . 1 மற்றும் 2 பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் மூலம் சாட்சி சம்மன் அனுப்பவேண்டும் என்றால் முறையாக அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றால் நானும் , 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் கூட்டுச்சதி செய்து எந்தவிதமான முறையான அனுமதி மனு தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தை ஏமாற்றும் விதத்தில் செயல்பட்டு சட்டத்திற்கு முரணான விதத்தில் அழைப்பாணையை ஏற்படுத்தி அனுப்பபட்டு அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . வாதிக்கு தாவா சொத்தில் சேர வேண்டிய சரிபாதி பாகச்சொத்தை வாதிக்கு கிடைக்கவிடமால் செய்யவேண்டி நான் , 1, 2 பிரதிவாதி மற்றும் 4 ம் பிரதிவாதி தவமணி ஆகியோர்கள் சேர்ந்து ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி எனக்கு தம்பி முறை வேண்டும் . எனது அப்பா பெயர் கருப்பசாமி ஆசாரி என்றால் சரிதான் . 4 ம் பிரதிவாதி கருப்பசாமி மன்னாடியார் என்பவரது மகன் என்றால் சரிதான் . தவமணிக்கும், வாதி இலட்சுமி மற்றும் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான் . தவமணி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் பாகப்பிரிவினைக் குறித்து குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதியின்

தவமணியின் எதிர்வாதம் குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1, 2 பிரதிவாதிகளின் எதிர்வாதம் என்னவென்று அதுகுறித்த விபரம் எனக்குத் தெரியாது . இலட்சுமி என் மீது சுமத்திய சாட்டுரைகளை நான் ஒப்புக்கொண்ட காரணத்தால் தான் நான் இந்த வழக்கில் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆனால் நான் எதிருரை தாக்கல் செய்யவில்லை . நான் இந்த வழக்கில் 10.08.2012 ல் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர் என அறிவிக்கப்பட்டதை நான் தள்ளுபடி செய்யும் விதமாக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை தள்ளுபடி செய்யாமல் வாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல.

சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரி மொத்தம் 4 திருமணங்கள் செய்துள்ளார். முதலாவதாக கருப்பாயம்மாள் என்பவரை திருமணம் செய்தார் . சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரிக்கும், கருப்பாயம்மாளுக்கும் எந்த குழந்தைகளும் பிறக்கவில்லை . சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரி 2 வதாக பார்வதியம்மாள் என்பவரை திருமணம் செய்தார் . சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரிக்கும், பார்வதியம்மாளுக்கும் பிறந்த மகள் தான் இந்த வழக்கின் வாதி இலட்சுமி என்றால் சரிதான் . சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரி 3 வதாக வடகவுஞ்சியைச் சேர்ந்த வள்ளியம்மாள் என்பவரை திருமணம் செய்தார் . வாதி இலட்சுமி அவருடன் பிறந்த மற்றொரு சகோதரி இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரி 4 வதாக ராஜாமணியம்மாள் என்பவரை திருமணம் செய்தார் . சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரி இறக்கும்போது இலட்சுமிக்கு 7 வயது இருக்கும் என்றால் வயது விபரம் தெரியாது , ஆனால் இலட்சுமி சின்னக்குழந்தையாக இருந்தார். ராஜாமணியம்மாளுக்கும், சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரிக்கும் திருமணம் நடக்கும்போது வாதி இலட்சுமிக்கு 10 வயது இருக்கும்.

வாதி இலட்சுமி கூலி வேலைக்குச் செல்லும் விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் . வாதி இலட்சுமிக்கு திருமணம் நடந்த சமயத்தில் எங்கள் ஊர் ராமர் கோயிலில் அதே சமயத்தில் மொத்தம் 9 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது என்றால் சரிதான் . மேற்சொன்ன விபரங்களை மறைத்து பொய்யான சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்றக் கேள்வி :**

**கேள்வி** – சின்னத்தம்பி @ கருப்பண ஆசாரிக்கும், வள்ளியம்மாளுக்கும் பிள்ளைகள் உள்ளதா என்றால்
**பதில்** – அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை.

**கேள்வி** – வள்ளியம்மாள் தற்போது உயிருடன் உள்ளரா என்றால்
**பதில்** – வள்ளியம்மாள் உயிருடன் இல்லை.

**கேள்வி** – கருப்பாயம்மாள் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால்
**பதில்** – கருப்பாயம்மாள் தற்போது உயிருடன் இல்லை.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.02 18:22:37 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.